# 05 இதயம் திறந்து (நன்றிப்பாடல்)

பாடல்: சேவியர்

இசை மற்றும் பாடியவர்: நிஷா

இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

இதயம் திறந்து நன்றி சொன்னேன்
இறைவா உமக்கே நன்றி சொன்னேன்

சரணம்

1. மார்கழி இரவில் மன்னவனே
   மானுட வடிவில் வந்தனையே
   குளிரும் பனியின் நடுவினிலே
   தொழுவில் வருகை புரிந்தனையே

2. விண்மீன் வானில் சிரித்ததுவே
   வழியில் ஒளியை விரித்ததுவே
   ஆடிடைக் கூட்டின் நடுவினிலே
   மாமரி இதழ்கள் சிரித்தனவே

3. ஞானியர் உம்மைப் பணிந்தனரே
   இடையரும் வந்து தொழுதனரே
   புல்லணை மீதில் புன்னகையாய்
   மாபரன் நீயும் மலர்ந்தனையே

4. மாளிகை வன்மம் கொண்டதுவே
   மனதில் மனிதம் கொன்றதுவே
   ஏழையர் எம்மை மீட்டிடவே
   மறைவாய் நீயும் வாழ்ந்தனையே

5. அழிவின் வழியில் நடந்தோமே
   மீட்பின் ஒளியைக் கொடுத்தனையே
   முடிவை அறிந்தே பிறந்தனையே
   விடிவாய் எம்மில் நிறைந்தனையே

This song is prepared for **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com** **(2019)**